சுருக்கம்

கருணை அடிப்படையில் பணி நியமனம் – பணியிடையே மரணமடைந்த அரசு ஊழியர்களின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.78 நாள் 21.04.2017.

ஹேவிளம்பி வருடம், சித்திரை மாதம் 8 -ஆம் நாள்

திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977.
2. அரசாணை (நிலை) எண்.8, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 07.01.1987.
3. அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 16.07.1993.
4. அரசாணை (நிலை) எண். 135, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04.10.2006.
5. அரசாணை (நிலை) எண்.165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 30.08.2010.
6. அரசாணை (நிலை) எண்.96, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 18.06.2012.
7. சென்னை, உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.14341/2012, தீர்ப்பு நாள் 17.4.2014.
8. அரசு தலைமை வழக்குரைஞரின் கருத்து எண்.82/15, நாள் 8.6.2015.

---

ஆணை

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், நெருங்கிய உறவினர்கள் என வரையறுக்கப்பட்டுள்ள, பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் மனைவி / கணவர் / மகன் / திருமணமாகாத மகள் ஆகியோர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவர் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், இறந்த அரசு ஊழியரின் கணவன் / மனைவி கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி, தங்களின் வாரிசுதாரர்களில், யாரை பரிந்துரை செய்கிறார்களோ, அவர்களுக்கே பணிநியமனம் வழங்கப்பட வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[த.பி.பா.]

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், கணவனால் கைவிடப்பட்டு, பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் குடும்பத்தில் வசித்து வரும் மகளுக்கும், அவ்வாறு வசித்துவரும் விதவை மகள் மற்றும் விவாகரத்துப் பெற்ற மகளுக்கும் பணியிடை இறந்த அரசுப் பணியாளரின் வாரிசுதாரர் என்ற முறையில், இறந்த அரசு ஊழியரின் கணவன் / மனைவி அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பணி நியமனம் வழங்க பரிசீலனை செய்யலாம் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க பரிசீலிக்கப்படும் போது அரசு ஊழியர் மரணமடைந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு முதுநிலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் கோரும் நேர்வுகளில், பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் நெருங்கிய உறவினர்கள் என வரையறுக்கப்பட்டுள்ள நபர்களில், திருமணமாகாத மகள் என்ற நிலையில் பணி நியமனம் கோரி விண்ணப்பம் அளித்து, பணி நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னரே திருமணம் செய்து கொண்டவர்கள் கருணையடிப்படையிலான பணி நியமனத்திற்கு இதர தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில், அவர்களுக்கும் பணி நியமனம் வழங்கிட வழிவகை செய்யும் வகையில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படை பணிநியமனங்களுக்கான தடையாணையினை கருத்தில் கொண்டு “**29.11.2001–க்கு** பின்னர் திருமணம் செய்துகொண்ட பெண் வாரிசுதாரர்களுக்கு அவர்கள் இதர தகுதிகளை நிறைவு செய்யும்பட்சத்தில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்றும், எனினும், **29.11.2001–க்கு** முன்னர் திருமணம் செய்து கொண்ட பெண் வாரிசுதாரர்களுக்கு இவ்வரசாணை பொருந்தாது” என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

7. பார்வை ஏழில் கண்ட சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை தீர்ப்பில் இறந்த அரசு ஊழியரின் திருமணமான பெண் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கீழ்க்கண்டவாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது:–

“to provide compassionate ground appointment to the petitioner, if she is otherwise eligible, without reference to marriage based on the Maintenance and Welfare of Parents and Senior Citizens Act, 2007, there is right to equality of woman, compassionate ground appointment would not be denied on the ground of marriage.”

மேலும் பல வழக்குகளில் இதே நிலைபாட்டினையே உயர்நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

8. மேலே எட்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு தலைமை வழக்குரைஞர் கீழ்கண்டவாறு தமது கருத்தினை தெரிவித்துள்ளார் :–

The Government has to immediately revise the relevant Government Orders and clearly provide that the legal heirs of deceased Government Employees if otherwise entitled to compassionate appointment would not be denied those benefits merely on the ground that they have entered into matrimony either before or after making the application for compassionate appointment.

9. இந்நேர்வினை உயர்நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையிலும் மற்றும் அரசு தலைமை வழக்குரைஞர் கருத்தின் அடிப்படையிலும், அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, இறந்த அரசு ஊழியரின் பெண் வாரிசுதாரர் கருணை அடிப்படையில் பணிகோரி விண்ணப்பிக்கும் போது

திருமணம் ஆனவராக இருந்தாலும், அவரது விண்ணப்பத்தை ஏற்கலாம் எனவும், அவ்வாறு திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படும் போது கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிசீலனை செய்யுமாறு ஆணையிடுகிறது.

(9.1) திருமணமான பெண்ணுக்கு, வாரிசு அடிப்படையில் பணி வழங்கப்படும் போது அரசாணை (நிலை) எண்.165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 30.8.2010–ல் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும்.

(9.2) இறந்த அரசு ஊழியரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களின் கருணை அடிப்படையிலான பணி நியமனக் கோரிக்கை மனு, உரிய மூன்றாண்டு காலத்திற்குள் வழங்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டிருப்பின் அதன் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து நிலுவையில் உள்ள இனங்களையும், அவ்வாறு நிராகரிக்கப்பட்டு, நீதிமன்றம் செல்லாமல் அரசு அலுவலகங்களில் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் இனங்களையும் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்யும்பட்சத்தில் பணிநியமனம் வழங்க பரிசீலனை செய்யலாம்.

(9.3) மேலே இனம் (9.2)–ல் கண்ட இருவகைப்பட்ட தனியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் போது, இந்நேர்வின் கீழ் பரிசீலனை செய்யப்படும் விண்ணப்பதாரர் எவரும் அவருக்கு மாற்றாக மற்றொருவருக்கு பணிகோரி மாற்று விண்ணப்பங்களை அளிக்க இயலாது.

(9.4) மேலே இனம் (9.2) தவிர, அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் திருமணமான பெண் வாரிசுதாரர்களால் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் அளித்து, அரசு அலுவலகங்களால் நிராகரிக்கப்பட்ட இதர நேர்வுகளை, முறையே நடைமுறையில் கடைபிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகளுக்குட்பட்டு அரசளவில் தனித்தனியாக பரிசீலிக்கலாம்.

(9.5) பணியிடை இறந்த அரசு ஊழியரின், இறந்த தேதியை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்படும் முதுநிலையை (seniority) தவறாது கடைபிடிக்க வேண்டும்.

(9.6) பணியிடை இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதா என்பதை உறுதி செய்துகொண்ட பின், இறந்த அரசு ஊழியரின், கணவன் / மனைவி ஆகியோர் வாரிசுதாரர்களில் எவரை கருணைஅடிப்படையில் பணி நியமனம் பெற பரிந்துரை செய்கிறாரோ, அவருக்கே பணி நியமனம் வழங்க பரிசீலிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை தவறாது கடைபிடிக்குமாறு அனைத்து பணி நியமன அதிகாரிகளும் (Appointing Authorities) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10. இவ்வரசாணையினை, தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள துறை தலைமையகங்கள் மற்றும் பணி நியமன அதிகாரிகளுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து தலைமைச் செயலக துறைகளும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

11. இவ்வரசாணை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.13785/G2/2017-1, நாள் 20.4.2017 மற்றும் சட்டத் துறையின் அசா.எண்.10264/2017, நாள் 21.4.2017–ல் பெறப்பட்ட ஒப்புதல்களுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. அமுதா
அரசு செயலாளர்

பெறுநர்
அரசு முதன்மைச் செயலாளர்/செயலாளர்,
தலைமைச் செயலக அனைத்துத் துறைகள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–35.
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள் / அனைத்து கருவூல அலுவலர்கள்.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள், சென்னை–9.

<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அனைத்து பிரிவுகள்.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை / சட்டத்துறை, சென்னை –9.
இருப்பு கோப்பு
உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கி. ஜெ. அமு
21/4/17
பிரிவு அலுவலர்.